முருகப்பெருமான் துணை

**மகான் சண்டிகேசர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.06.2023, வெள்ளிக்கிழமை

1. தவயோக ராஜனே அரங்கா
   தனிப் பெருங்கருணை வடிவாக
   அவதாரம் எடுத்த ஞானதேசிகா
   அண்ணலே உன் பெருமைகூறி
2. கூறியே சோபகிருது மிதுனதிங்கள்
   குறைவிலா முதல்திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 01ம் நாள், 16.06.2023, வெள்ளிக்கிழமை)
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   தேசிகனார் கேட்க சண்டிகேசர் யானும்
3. யானும் உலகம் நலம்பெற உரைப்பேன்
   உண்மை பொருள் அறியாமல்
   ஞானமிலா கலிவாழ் மக்கள்
   நாட்டிடுவேன் தீவினையில் உழன்று
4. உழன்று பாவச் செயல்களான
   ஊழல் லஞ்சம் வஞ்சம்என
   சலனமறத் துன்பம் பிறஉயிர்க்கு
   சாற்றிடுவேன் சுயநலமுறச் செய்து
5. செய்துமே தன்னூன் பெருக்க
   சிறப்பிலா உயிர்க்கொலை செய்து
   அய்யமிலா பாவவழித் தொடர
   அடுத்தடுத்துப் பிறவிப் பிணிவழி
6. பிணிவழி உழன்றுத் தொடர்ந்து
   பேதமை கண்டிடும் மானுடமே
   இனியேனும் அஞ்ஞானம் விட்டு
   இயம்பிடுவேன் அரங்க மகானின்
7. மகானின் ஞான வழிகளை
   மனமுவந்து ஏற்றுப் பணிந்து
   மிகையிலா பிறவிப் பிணியை
   முற்றிலும் அகற்றும் விதமாக

8. ஆகவே சுத்த சன்மார்க்க
ஆற்றல் மிக்க ஞானநெறியை
செகத்தில் ஏற்றேன் கலந்தேனென
சடாட்சர தீட்சை அரங்கனிடம்

9. அரங்கனிடம் ஏற்றுத் தொடர
அழிவை விட்டு அகன்றுமே
வரங்கள் மிகுதி கிட்டியே
வளரும் மலரும் ஞானபலம்

10. பலமாக குருவருள் சக்தியோடு
பசிபிணி விரட்டும் தருமமும்
பலமாக வாழ்வில் இணைய
பங்களிப்புச் செய்தவர்கள் எல்லாம்

11. எல்லோரும் ஞானவான்களாக
இந்த யுகத்தையே மாற்றுகின்ற
வல்லவர்களாகத் தேறி சிறப்பர்
வழங்கிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—